**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 291/2025 P.W. 1/L.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. திவ்யா | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 25.02.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் காணொலி காட்சி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து இல்லதரசியாக இருந்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். வழக்கின் புகார்தாரர் லீலா எனது மாமி. அவர் தற்போது வெளிநாட்டில் இருந்து வருகிறார். 31.01.2025 ம் தேதி மாலை சுமார் 06.00 மணியளவில் வழக்கின் புகார்தாரர் லீலா என்பவர் குன்னன்விளை அருகே உள்ள தோப்பிற்கு செல்வதற்காக லீலா அவர்கள் சென்றபோது குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனது மாமி லீலாவை போகவிடாமல் தடுத்து தள்ளிவிட்டு தகாத வார்த்தையால் பேசி அவரிடம் தவறாக நடக்க முயன்றார்.

2. எனது மாமியின் காது, கழுத்து ஆகிய பகுதிகளில் கடித்து மேலும் அவர் அணிந்திருந்த துணிகளை விலக்கியும் இருந்தார். நானும் எனது கணவரும் சேர்ந்து சத்தம் போட்டு குற்றம் சுமத்தப்பட்ட நபரை விரட்டிவிட்டோம். அப்போது குற்றம் சுமத்தப்பட்ட நபர் அவர் கையில் கத்தி வைத்திருந்தார். 2 கொலை நான் செய்துள்ளேன், உங்களை கொன்றுவிடுவேன் என்று மிரட்டிவிட்டு அவர் அங்கிருந்து சென்றுவிட்டார். காயம்பட்ட எனது மாமி சிகிட்சைக்காக சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை :**

1. என்னை போலீசார் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் மாலை நேரத்தில் விசாரித்தார்கள். சம்பவம் நடந்து 3 நாட்களுக்கு பிறகு விசாரித்தார்கள். என் மாமியை நான் ஆனக்குழி வைத்தியசாலைக்கும் பின்னர் குளச்சல் மருத்துவமனைக்கும் அழைத்துச்சென்றேன். ஆனக்குழி வைத்தியசாலையில் மருந்தை வாங்கி கொண்டு வந்துவிட்டோம், குளச்சல் மருத்துவமனைக்கும் சென்று மருந்து வாங்கி வந்துவிட்டோம். சம்பவம் நடந்த மறுநாள் குளச்சல் அரசு மருத்துவமனைக்குச் சென்றோம். மேற்படி சங்கதியை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன்.

2. முதல் விசாரணை சாட்சியத்தில் சாட்சி சொன்னதை போலீசார் சொல்லிக்கொடுத்தார்களா என்றால் ஆம் அன்று நடந்தை சொல்லிக்கொடுத்தார்கள். நாங்கள் தான் சொன்னோம். சம்பவயிடத்திற்கு அருகில் வீடுகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததை என் மாமி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் இல்லை, சத்தம் கேட்டு தான் சென்றேன். சம்பவயிடத்திற்கும் எங்கள் வீட்டிற்கும் கொஞ்சம் தூரம் தான் இருக்கும். வீடு, ரோடை கிறாஸ் பண்ணினால் சம்பவயிடம். குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் எங்களுக்கும் ஏற்கனவே வழிப்பிரச்சினை உள்ளது என்றால் சரிதான்.

3. பட்டியல் சாட்சி சரோஜா எனக்கு சொந்தக்காரர் தான். ஸ்டெல்லா பாய் எனக்கு உறவினர் என்றால் இல்லை, பேசுவோம். மேற்படி சம்பவத்தின் போது நானும் எனது கணவரும் சம்பவத்தை தடுக்காமல் வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்தோமா என்றால் சாட்சி அமைதியாக இருக்கிறார். மருத்துவமனைக்கு என் கணவர் என் மாமியை அழைத்துச்சென்றாரா என்றால் - ஆம். என்னை என் வீட்டில் வைத்து தான் விசாரித்தார்கள். என் மாமி கொடுத்த புகாரை யார் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் மாமிக்கு எழுதப்படிக்க தெரியும்.

4. சம்பவம் நடந்த இடம் தங்கேஸ்வரன் விளையாகும். நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், என் மாமி உண்மைக்கு மாறாக புகார் கொடுத்து அதன் அடிப்படையில் முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.